பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஐப்பசி 17உ (3—11—67) வெள்ளி   வெளியூர்: ஐப்பசி 18உ (4—11—67) சனி [இதழ்: 117

அமைச்சர் பதவி பற்றி
திரிகுண சென்

புதுடில்லி, நவ. 2—

"இந்தியாவில் கல்வித் தகுதியே தேவையில்லாத பதவி அமைச்சர் பதவி ஒன்றுதான்" என்று மத்தியக் கல்வி அமைச்சர் டாக்டர் திரிகுண சேன் குறிப்பிட்டிருக்கிறார்.

"அரசியல் கட்சியின் ஆதரவோடு தேர்தலில் வெற்றி பெற்றாலே அமைச்சராக முடியும்" என்றும் அவர் கூறினார்.

காங்கிரசாரின் அர்த்தமற்ற கூற்று!

விலைவாசியைக் குறைக்கும் அதிகாரம் யாரிடத்தில்?

சென்னைக் கூட்டத்தில் அண்ணா அறைகூவல்

சென்னை, நவ. 3—

"'தி. மு. க. ஆட்சியில் விலைவாசி குறைந்ததா?' என்று காங்கிரசார் கேட்கின்றனர்! தமிழ் நாட்டில் விளைகிற பொருள்களை—தமிழ் நாட்டின் தேவைக்குப் போக மீதமுள்ளதை மட்டும் வெளியே ஏற்றுமதி செய்யவும், தமிழ் நாட்டுக்குத் தேவையானவற்றைத் தருவித்துக் கொள்ளவுமான முழு அதிகாரத்தையும் மாநில அரசுக்கு அளிக்கட்டும்! ஆறே மாதங்களில், எல்லா விலைவாசிகளையும் இறக்கிக் காட்டுகிறேன்"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அறைகூவல் விடுத்தார்கள்.

நேற்று அமைந்தகரையில் நடந்த தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"1967 பிப்ரவரியில் அளித்த தீர்ப்பை மீண்டும் சிந்தித்துச் சீர்தூக்கி உறுதிப்படுத்த நவம்பர் 7—ஒரு நல்வாய்ப்பாக அமைந்துள்ளது!

முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம், 'மக்கள் போதையில் இருந்தார்கள்' என்கிறார்; 'தெளிந்தார்கள்' என்கிறார்!

தமிழ்நாட்டு மக்கள் அனைவருமா போதையில் இருந்தார்கள்? மேற்கு வங்காளத்திலே—கேரளத்திலே — பீகாரிலே—இப்படி இந்தியா பூராவிலும் மக்கள் போதையில் இருந்ததாக வாதத்துக்காக வைத்துக்கொள்வோம்; அப்படியானால், 'இனி என்ன உங்களுக்கு இங்கே வேலை? ஒதுங்கியிருக்க வேண்டியதுதானே? பாரத் சேவக் சமாஜம்—சர்வ சேவா சங்கம்—கதர்ப் பணி என்று இருக்கும் வேலைகளைச் செய்துகொண்டிருக்கலாமே'—என்று நான் கேட்கலாம் அல்லவா?

அவரே சொன்னார்—'இனி நான் சங்கீதம் கேட்கப்போகிறேன்—நாட்டியம் பார்க்கப் போகிறேன்' என்று! அவரே இப்போது ஒவ்வொரு மாலையும் சங்கீதம் பாடிக்கொண்டிருக்கிறார்!

இவர்கள் கேட்டபோதெல்லாம் மக்கள், இவர்களுக்கு வாக்களித்தார்களே! மக்கள் கஷ்டத்தைப் போக்கிட — கவலையைப் போக்கிட இவர்களால் முடிந்ததா?

இந்த இடைத் தேர்தலில், தங்களுக்கு வாக்களிக்கக் கேட்கும் இவர்கள் — ஆளுகிறார்களே டில்லியில்—கடந்த ஆறு மாதங்களில் போட்டிருக்கின்ற வரிகள் என்ன? நிலைமை என்ன?

சந்தடியான நேரம் என்பதால் வந்திருக்கிறார்கள்; செல்லாத நாணயத்தைக் கடையில் கொடுத்து சிகரெட் வாங்க முயற்சிப்பவனைப் போல்—இவர்களது தேர்தல் நாணயததை மட்டுமல்ல—தேர்தல் ஓட்டுக்காகக் கொடுக்கப்படும் பணமானாலும் விழிப்புடன் இருக்கும் கடைக்காரரைப்போல் – மக்கள் விழிப்புடன் நடந்து கொள்ள வேண்டும். தேர்தல் தில்லுமுல்லுகள் நடைபெருதபடி அதிகாரிகளும் பார்த்துக்கொள்வார்கள் என்றாலும், மக்களும் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அரிசியின் விலையைக் குறைத்தோம் என்றால், 'சீரகத்தின் விலை என்னவாயிற்று?' என்று கேட்கிறார்கள்!

முதலில், இன்றியமையாப் பொருள்களின் விலை குறைய வகை செய்ய வேண்டுமென்று முயற்சிக்கிறோம்!

போன ஆண்டு இதே மாதம்—இதே நாளில் அரிசிக்காக மக்கள் பட்ட அவதிகள் எவ்வளவு? இப்போது அந்த நிலையா? தமிழ் நாட்டில் எந்த இடத்திலாவது அரிசிப் பஞ்சம் உண்டா?

'படி அரிசித் திட்டம் தேவையா, இல்லையா' என்ற கேள்விக்குப் பதிலளிக்க வேண்டிய நாள்—நவம்பர் 7.

படி அரிசித் திட்டத்தை அமுல் செய்வதால் ஏற்படும் இழப்பை ஈடு செய்ய டில்லியிடம் பணம் கேட்டால், 'இல்லை' என்கிறார்கள்!

கோதுமை உண்போருக்கு மலிவு விலையில் கோதுமை கிடைக்கச் செய்வதற்காக மத்திய அரசு ஆண்டொன்றுக்கு ரூ. 108 கோடி அளவில் நட்டத்தை ஏற்றுக்கொள்கிறது! காஷ்மீர் மக்களுக்கு அந்த விலையிலும் பாதி விலைக்கே கோதுமை வழங்கப் படுகின்றது! அந்த மக்களுக்கு, 'பாகிஸ்தான்' என்ற எண்ணம் வராதிருக்க இப்படிச் செய்யப் படுகின்றது!

தமிழ் நாட்டு மக்களும், அரிசிக்குப் பதில் கோதுமையைச் சாப்பிடுபவர்களாக இருந்தால், மத்திய அரசினர், ஏற்படக்கூடிய நட்டத்தை ஏற்றிருப்பார்கள்!

தமிழ் நாடு இந்தியாவில் 10-ல் ஒரு பங்கு என்பதால், ரூ. 10 கோடி கொடுங்கள்—'எங்கள் மக்களுக்கு மலிவு விலையில் ரூபாய்க்குப் படி அரிசி போட' என்று டில்லியில் கேட்டேன்; 'நியாயமான கேள்வி' என்று காமராசரும், பக்தவத்சலமும் என்னுடன சேர்ந்து சொல்லியிருந்தால், ரூ. 10 கோடி என்பது ரூ. 5 கோடி அளவுக்கேனும் கிடைத்திருக்கும்!

டில்லியில் இருப்பவர்கள் பதில் சொல்லுவதற்கு முன்னால், இவர்களே, 'யாரைக் கேட்டுப் படி அரிசி போட்டீர்கள்' என்று கேட்கிறார்கள்!

ஏழையின் இளைத்த உடல் என்னைப் படி அரிசி போடச் சொல்லிற்று! அரிசி கிடைக்காது அலைந்தபோது அவர்கள் எழுப்பிய அழுகுரல் போடச் சொல்லிற்று!

அவர்கள் எண்ணமெல்லாம், மத்திய அரசின் உதவி இந்தப் படி அரிசித் திட்டத்துக்குக் கிடைக்காமற் செய்துவிட்டு, 'பார்த்தீர்களா? பத்து நாள்தான் போட்டார்கள்; அப்புறம் முடியவில்லை' என்று கலகம் மூட்டிவிட வேண்டும் என்பதே!

படி அரிசித் திட்டத்தை நன்றாக யோசித்த பின்பே அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறோம்! மத்திய உதவி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் படி அரிசி திட்டம் தொடரும்!

இங்கிருந்து இலங்கைக்கு வெங்காய ஏற்றுமதி செய்வதற்கும் கூட டில்லியிடமல்லவா அனுமதி பெறவேண்டியுள்ளது!

தொழிற்சாலைகளைத் துவக்கத் தமிழக அரசுக்கு அதிகாரம் உண்டு: ஆனால், அதனுள் வைக்கவேண்டிய இயந்திரத்தைத் தருவிக்க, டில்லியிடத்தில் அனுமதி பெறவேண்டும்!

இந்த நிலைமையை எப்போது திருத்துவது? எப்படித் திருத்துவது? யார் திருத்துவது?

இந்த நிலைமையைக்கூட காங்கிரசுக்காரர்கள், மக்களிடத்தில் சொல்லவில்லையே!

இதை நாம் சொன்னால், 'எதற்கெடுத்தாலும் டில்லியைப் பற்றியே பேசுவதா?' என்கிறார் காமராசர்!

இவர் மட்டும் இவருடைய காங்கிரசுக் கட்சிக் காரியங்களுக்காக அடிக்கடி ஜபல்பூர் என்றும், டில்லி என்றும் போகிறாரே'—ஏன்? 'இங்கேதான்—திருமலைப்பிள்ளை ரோடு வீட்டில்தான் கமிட்டி: எல்லோரும் இங்கே வாருங்கள்' என்று இவர் சொல்வதுதானே!

நான் டில்லியைச் சுட்டிக் காட்டுகிறேன் என்று குறைபட்டுக் கொள்ளும் இவர்கள், ரோஷமிருந்தால் அதிகாரத்தைத் திருப்பிக் கொடுக்கட்டும்!

'பிரிந்து போகிறேன்' என்றேன்! 'கூடாது' என்றார்கள்! 'சரி' என்று இருக்கிறேன் — எதற்காக? குட்டுகின்ற குட்டையெல்லாம் தாங்கிக் கொள்ளவா? இதற்கெல்லாம் தலை குனிகிறவன் நானல்ல! ஆனால், உரிமைகள் பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கையினால் இருக்கிறோம்;"

'ஆகாஷ்வாணி'
அடியோடு ஒழிந்தது!
'வானொலி' என்றே வழங்க உத்தரவு!

சென்னை, நவ. 3—

"அனைத்திந்திய வானொலியில், 'ஆகாஷ்வாணி' என்று கூறுவதைக் கைவிட வேண்டும்" என்ற தமிழக மக்களின் நெடுநாள் கோரிக்கை, இன்று நிறைவேறுகிறது.

இனி, தமிழ் நாட்டில் உள்ள வானொலி நிலையங்களில், 'ஆகாஷ்வாணி' என்பதற்குப் பதில், 'வானொலி' என்றே வழங்கப் படும்.

காங்கிரசு ஆட்சிக் காலத்தில் இந்தக் கோரிக்கைக்காக ஒரு போராட்டமே நடைபெற்றது.

தமிழ்ப் பேராசிரியர்கள், புலவர் பெருமக்கள், தாய்மொழிப் பற்றுள்ள எழுத்தாளர்கள், கலைஞர்கள் பலரும், 'ஆகாஷ்வாணி' என்ற அறிவிப்பு கைவிடப்படும்வரை வானொலி நிகழ்ச்சிகளில் பங்குகொள்வதில்லை என அறிவித்திருந்தனர்.

திருச்சி திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், வானொலி நிலையமுன் குடும்பத்தோடு அறப்போர் நடத்தினார்.

திராவிட முன்னேற்றக் கழகம், 'ஆகாஷ்வாணி'யை எதிர்த்து தனது பொதுக்குழுவிலும், மாநாடுகளிலும் தீர்மானம் நிறைவேற்றியதுடன், 'கழகத்தவர் எவரும் வானொலி நிகழ்ச்சியில் பங்கு கொள்வதில்லை' என்றும் முடிவு செய்தனர்.

சென்னை மாநகராட்சிமன்றத்தில் தி. மு. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதும், முதல் மேயராகப் பதவி ஏற்ற திரு. அ. பொ. அரசு, வானொலியில் உரை நிகழ்த்த அழைக்கப்பட்டபோது, கழகத்தின் முடிவுப்படி மறுத்துவிட்டார்! அதேபோல் அடுத்தடுத்து பதவியேற்ற தி. மு. க. மேயர்களும், வானொலியில் உரையாற்ற மறுத்துவிட்டனர்!

அறிஞர் அண்ணா முதல் கழகத் தோழர்கள் அனைவருமே வானொலியின் அழைப்பை ஏற்க மறுத்துவிட்டனர்!

சீன—பாகிஸ்தான் ஆக்கிரமிப்பை முன்னிட்டு, நாட்டுக்கு வந்த ஆபத்தையொட்டியே அண்ணா அவர்களும், மற்றவர்களும், தங்கள் கொள்கையை ஒதுக்கி வைத்துவிட்டு, வானொலியில் பேசலானார்கள்!

காங்கிரசு ஆட்சி தமிழகத்தில் ஒழிந்து கழக ஆட்சி மலர்ந்ததும், கழக அமைச்சரவை, ஆகாஷ்வாணி ஒழிப்புக்கு வழி செய்தது! மத்திய ஒலிபரப்பு அமைச்சர் திரு. கே. கே. ஷா தமிழகத்திற்கு வந்திருந்தபோது, அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, இது குறித்து அவரிடம் வற்புறுத்தினார்; அவரும், 'டெல்லி சென்றதும் ஆவன செய்வதாக'க் கூறிச் சென்றார்.

இப்போது தமிழகத்தின் கோரிக்கையை டெல்லி ஏற்று, 'ஆகாஷ்வாணி'க்குப் பதில், 'வானொலி' என்று வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

இன்று முதல்—சென்னை, திருச்சி, கோவை, திருநெல்வேலி வானொலி நிலையங்களிலும், புதுவை வானொலி நிலையத்திலும், 'ஆகாஷ்வாணி' அடியோடு ஒழிக்கப்பட்டு, 'வானொலி' என்றே அறிவிக்கப்படும்.

தன்னை மீறி
வெளிவரும் உண்மை!

சென்னை, நவ. 2—

"விவசாயிகளுக்குத் தேவையான உரத்தைக் கொடுக்காமல் 'உற்பத்தியைப் பெருக்கு—உற்பத்தியைப் பெருக்கு' என்று சொல்லுவது கேட்டு எனக்குக்கூட மிகவும் கோபம்தான் வருகிறது.

"ஏழை விவசாயிகள் எவ்வாறு உற்பத்தியைப் பெருக்குவார்கள்.

"போதிய உரம் முதலியவற்றை உழவருக்கு முதலில் நாம் கிடைக்கச்செய்ய வேண்டும்; அது நம் பொறுப்பே ஆகும்"

என்று மத்தியத் துணை உணவு அமைச்சர், செய்தியாளர்களிடம் கூறினார்.

வங்க முதலமைச்சரின் கடும் எச்சரிக்கை

கல்கத்தா, நவ. 2—

வன்முறைச் செயல்களிலும், சட்டவிரோதமான நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறவர்களுக்கு மேற்கு வங்க முதலமைச்சர் அஜாய் முகர்ஜி கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சட்டவிரோதமான நடவடிக்கைகளில் இறங்குகிறவர்கள் மீதும் அவர்களுக்கு உடந்தையாக இருப்பவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

வெளிநாட்டு அமைச்சர் பதவி யாருக்கு?

ஆள் தேடும் படலம் தொடருகிறது!

‘உருப்படியான வெளிவிவகாரக் கொள்கை இல்லை’ என இலண்டன் ஏடு இடித்துரை

"இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் பதவிக்குத் தகுந்த ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் முயற்சி வெற்றி பெறவில்லை"

என்று பிரிட்டிஷ் ‘கார்டியன்’ பத்திரிகையின் கல்கத்தா நிருபர் எழுதியுள்ளார்.

சாக்ளா இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து அப்பதவிப் பொறுப்பைத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி எடுத்துக்கொண்டதை அவர் குறிப்பிட்டு எழுதியிருப்பதாவது :—

"அப்பொறுப்பு கிட்டத்தட்ட அவரிடமே நிரந்தரமாக இருக்கும் போலத் தோன்றுகிறது. ‘புதிய வெளிவிவகார அமைச்சர் ஒருவரை நியமித்தால் ஏற்படக்கூடியதைவிட இப்போதைய ஏற்பாட்டினால் பிரச்சினைகள் குறைவாகவே இருக்கும்’ என்று அவருக்கு யோசனை கூறப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

"இது, காங்கிரசுக் கட்சி அரசியல்மீது அவருக்கு உறுதியான பிடியில்லை என்று காட்டுவது போல உள்ளது. தவிர, அவர் தேர்ந்தெடுப்பதற்குச் சில ஆட்களே உள்ளனர்; ஏனெனில், இந்திய அரசியல்வாதிகளில் ஒரு சிலர்தான், வெளிவிவகாரங்களைக் கையாளுவதில் பயிற்சியுடையவர்கள்!

"சாக்ளா வெளியேறியதும், சுவரண் சிங் அப்பதவிக்கு வரலாம் என்ற யூகம் இருந்தது; ஆனால் இராணுவ அமைச்சகத்திலிருந்து சுவரண் சிங்கைக் கிளப்பினால், அப்பொறுப்பைப் பெறப் பலர் போட்டியிடுவர் என்று தோன்றுகிறது; அப்போட்டியினால், அமைச்சரவையின் ஒற்றுமை பாதிக்கப்படலாம்.

"ஒரு சிலர், ‘இந்தியாவுக்குத் தனி வெளிவிவகார அமைச்சர் இல்லாவிட்டால், அது ஒன்றும் மோசமில்லை; இந்தியாவுக்கு உருப்படியான வெளிவிவகாரக் கொள்கை இல்லை’ என்று கூறுகின்றனர். அவர்கள் ஏதோ மனக்கசப்பில் இப்படிக் கூறுவதாக மட்டும் சொல்ல முடியாது.

உலக விவகாரங்களில் இந்தியாவின் பங்கு மட்டானதே. நாட்டை ஏராளமான பிரச்சினைகள் எதிர்ப்பட்டுள்ளதால், பெரும்பாலான மக்கள் உள்சார்ந்த நோக்கைக் கொண்டவர்களாக மாறி வருகின்றனர். வியட்நாம் பிரச்சினை குறித்து உலகம் முழுவதிலும் ஆர்ப்பாட்டங்கள் நடந்துவருகிற இவ்வேளையில், அதுபற்றி அநேகமாக முற்றிலும் அக்கறையற்றதாக உள்ள நாடு இந்தியா என்பது ஏதோ தற்செயலாக உள்ளதல்ல!"

தூதுவரங்களின் பெயரால் தண்டச் செலவு?

தகவலே இல்லாமல் இயங்கும் தகவல் நிலையங்கள்

புதுடில்லி, அக். 31—

"வெளிநாடுகளில் இந்தியாவைப் பற்றிய பிரசாரம் போதுமான அளவு இல்லை" என்று, ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்துவிட்டுத் திரும்பியுள்ள இந்தியத் தூதுக்குழு தெரிவித்திருக்கிறது.

வெளிநாடுகளில் இந்தியப் பிரசாரத் துறையாளர் சீராக இயங்கவில்லை என்பதில் சந்தேகம் இல்லை; ஆனால் அதே சமயத்தில், பாகிஸ்தான் பிரசாரமோ, அமோகமாக நடக்கிறது.

‘இந்தியாவில் 8 கோடி முஸ்லிம்கள் வாழ்கிறார்கள்’ என்று ஓர் இந்தியக் குழுவினர் தெரிவித்தபோது, பிரெஞ்சு நகர மக்கள் வியப்புற்றனர்! இதுவரை, இந்தியா முழுக்க முழுக்க ஓர் ‘இந்து நாடு’ என்றே கருதி வந்திருக்கிறார்கள்!

காஷ்மீர் சிக்கலிலும் பாகிஸ்தான், இந்தியாவைவிடப் பெரும் அளவில் பிரசாரம் செய்து வந்திருக்கிறது. பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளின் பத்திரிகைகளில், இந்தியாவைப் பற்றிய செய்திகள் குறைவே; இந்தியாவிலிருக்கும் செய்தித் துறையினர் சுறுசுறுப்பாக இயங்காததே இதற்குக் காரணம்; ஆனால் அதே சமயத்தில், பாகிஸ்தான் செய்திகள், ஐரோப்பியப் பத்திரிகைகளில் அதிகமாகவே வெளியாகின்றன!

வெளிநாடுகளில் உள்ள தகவல் அலுவலகங்கள், ‘தகவல் இன்றி’ச் செயல்படுகின்றன!

எல்லாவற்றையும்விட வேதனை தரக்கூடியது என்னவென்றால், அனைத்துநாட்டு நிறுவனங்களிலும் உலக அலுவலகங்களிலும் இந்தியக் கொடிகளை பார்ப்பது அரிது!

கனடிய நகரம் ஒன்றில்அனைத்து நாட்டு மாநாடு நடந்தபோது, இந்தியக் கொடி இல்லாதது குறித்து இந்தியத் தூதர் ஜெனரல் சௌத்திரியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இந்தியாவைத் தெரியாத இந்தியத் தூதுவர்கள்

"சொந்த நாட்டின் முக்கிய நகரங்களைப் பற்றியும், அங்கே உள்ள கல்லூரிகளைப் பற்றியும் தெரிந்துவைத்திராத தூதுவர்கள்தான், இந்தியாவை வெளிநாடுகளில் பிரதிபலிக்கின்றனர்" என்பதற்கு, மேலும் ஒரு எடுத்துக்காட்டான செய்தி கிடைத்திருக்கிறது.

மைசூர் மாநிலத்தில் உள்ள மங்களூர் நகரமோ அல்லது அந்த நகரத்துக்கு அருகிலுள்ள சூரத்கல் பொறியியல் கல்லூரியோ துருக்கியில் உள்ள இந்தியத் தூதுவரக அதிகாரிக்குத் தெரியவில்லை!

இந்தியாவுக்கு வந்து மேற்கண்ட பல்கலைக் கழகத்தில் பாடம் கற்பிக்க இருந்த பேராசிரியர் ஒருவர், அங்காராவில் உள்ள இந்தியத் தூதுவரக அதிகாரிகளைச் சந்தித்து விவரங்கள் கேட்டபோது, ‘அப்படி ஒரு நகரமோ, பல்கலைக் கழகமோ அங்கு இல்லை’ எனத் தெரிவித்திருக்கின்றனர்!

பின்னர், எவருடைய உதவியின் மூலமோ மங்களூருக்கு வந்துள்ள அப்பேராசிரியர், அங்கே நடந்த ஐ. நா. தின விழாக் கூட்டம் ஒன்றில் பேசுகையில், இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்!

கிராமங்களில்வீடுகட்ட ரூ. 20,000 கோடி!

புதுடில்லி, அக். 31—

கிராமப் பகுதிகளிம் வீடு பற்றுக் குறையைத் தீர்க்க ரூ. 20,000 கோடி தேவைப்படும் எனத் தெரிகிறது.

நாட்டின் 5 இலட்சம் கிராமங்களில் 627 இலட்சம் வீடுகளைக் கட்ட வேண்டும் அல்லது சீரமைக்க வேண்டும்.

ஒரு வீட்டுக்கு ரூ. 3000 தேவை என மதிப்பிட்டாலும் கிராமங்களில் வீடுகள் பற்றுக் குறையைத் தீர்க்க ரூ. 20,000 கோடியாவது தேவைப்படும்.

ஏசித் திரிவதா எதிர்க் கட்சியின் செயல் முறை?

அனுபவித்துவந்த உரிமை பறிபோய்விட்டதால் ஆத்திரப்படுவானேன்?

காங்கிரசார் போக்கு— அமைச்சர் முத்துசாமி கண்டனம் — விளக்கம்

சிதம்பரம், அக். 31—

"நாட்டில் பொருளாதாரச் சீர்குலைவும், பணவீக்கமும், விலைவாசி ஏற்றமும் ஏற்பட்டதும், இனி, வருங்காலத்திலும் ஏற்படவிருப்பதற்கும் காரணம், மத்திய அரசு கண்மூடித் தனமாக நோட்டு அச்சடிப்பதுதான்!

"மாநிலங்களின் பல வருவாய்த் துறைகள் மத்திய அரசிடம் இருக்கின்றன. மாநில அரசும் — மத்திய அரசும் ஒட்டி உறவாட வேண்டுமென்றால், மாநில அரசு தன் தேவைகளை மத்திய அரசிடம் கேட்காமல் பின் யாரிடம் கேட்பது?"

என்று, உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள், அக். 27-ல், சிதம்பரம் நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் வினவினார்.

காங்கிரசார், கழக ஆட்சியை ஏசும் போக்கைக் கண்டித்துப் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது :—

"தமிழ்நாட்டில் காங்கிரசுக் கட்சி நல்ல எதிர்க் கட்சியாகச் செயல்படவில்லை; நல்ல மாற்றுத் திட்டங்கள் கொடுக்கவில்லை; மாமியார் — மருமகள்போல் தாங்கள் 20 ஆண்டுக் காலம் அனுபவித்துவந்த பதவி போய்விட்டதென்று ஆத்திரம் கொண்டு பேசி, ஏசிவருகிறார்கள்; இது, நல்ல எதிர்க் கட்சிக்கு அழகல்ல; மக்கள் அளித்துள்ள வாக்குப்படி, ஐந்தாண்டுக் காலம் பொருத்திருந்து பார்த்துப் பேசவேண்டும்.

"படி அரிசித் திட்டத்தைப் பரிகசிப்பவர்கள் மிராசுதார்களைத் தூண்டிவிட்டு, ‘நெல்லுக்கு அதிக விலை கொடு’ என்று கேட்கும்படிச் சொல்வது மிகத் தவறான செய்கையாகும். இன்று விவசாயச் செலவு அதிகரித்ததற்குக், காரணம், உர விலையை உயர்த்தியதுதான். அதைக் குறைக்கச் சொல்லி மத்திய அரசிடம் காங்கிரசுக்காரர்கள் போராட்டம் நடத்த வேண்டும்.

"இந்தியத் துணைக் கண்டத்தில் மற்ற பல மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில்தான் சட்டம் ஒழுங்கு நல்லபடி அமுல் நடத்தப்படுகிறது."

கிராம அதிகாரிகள் ஊதியம் உயரும்

முழுநேர ஊழியராவர்

மதுரை, அக். 31—

"கிராம அதிகாரிகளின் ஊதியம் உயர்த்தப்படும்" என்று சட்ட அமைச்சர் மாதவன் இங்கு அறிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது :—

"கிராம அதிகாரிகள் பரம்பரை வாரிசுப்படி நியமிக்கப்படுவது கூடாது என்று ஏற்கனவே சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்புக் கூறியிருக்கிறது; பரம்பரை முறையை மாற்றி அமைக்க ஏற்கனவே உள்ள அரசும் முடிவு செய்தது; ஆனால் அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை.

"இப்போது கிராம அதிகாரிகளுக்கு மிகக் குறைந்த ஊதியம் கொடுக்கப்படுகிறது; இது போதாது. அவர்களை முழுநேர அரசு ஊழியர்களாக்கி அதிக அளவு ஊதியம் கொடுப்பதுடன், அரசு ஊழியர்களுக்கான எல்லா சலுகைகளும் கொடுக்கப்படும். இந்தப் புதிய மாறுதல் விரைவில் நடைமுறைக்கு வரும்."

20 கோடி டாலர் செலவில் விதைப் பக்குவ ஆலைகள்

ஆண்டுக்கு 100 கோடி டாலர் மதிப்புக்கு விதைகள் உற்பத்தி

பசிப் பிணியை போக்க அமெரிக்க நிபுணர் ஆய்வுரை

நியூயார்க், நவ. 3—

"கடுமையான உணவுப் பற்றுக் குறை இருந்துவரும் ஆசிய — ஆப்பிரிக்க நாடுகள், திருந்திய விதைகளைக் கொண்டு அதைப் போக்கிவிடலாம்"

என்று, உலக முழுவதிலும் நிபுணராக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஹெர்பட் ஜே. வாட்டர்ஸ் கூறுகிறார்.

"உணவு விளைச்சலைக் கூடுதலாக்குவதற்கு உடனடியாகச் சிறந்தது உரங்களைப் பயன்படுத்துவதேயாகும் என்று கூறப்பட்டது; இருப்பினும், இவ்வுரங்களுடன் நல்ல விதைகளையும் பயிர் செய்ய வேண்டும்"

என்று, ஜான்சன் ஆட்சியின் ‘பசிமீது போர்’ என்ற அமைப்பின் துணை இயக்குநராயிருக்கும் அவர் கூறினார்.

"அடுத்த இருபதாண்டுகளுக்குள் வரவிருக்கும் பேராபத்தைத் தவிர்ப்பது, இன்று பயிர் செய்யப்படும் நிலப்பரப்பின் ஏக்கர்வாரி விளைச்சலைப் பெருக்குவதைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்பதை உலக உணவுச் சிக்கல் பற்றி நடந்த பெரிய ஆய்வுகள் அனைத்தும் காட்டுகின்றன; விதை — திருந்திய விதை — இதைச் சாதித்துவிடும்" என்று அவர் குறிப்பிட்டார்.

வளர்ச்சி குன்றிய நாடுகளின் தேவைக்கென ஆண்டுதோறும் 3 கோடி டன்னுக்கும் அதிகமான விதைகளை உண்டாக்கவேண்டி வருமென்று அவர் எதிர்பார்க்கிறார்.

"வருகிற 1985-ம் ஆண்டுவாக்கில் ஒவ்வொன்றும் 3,000 டன் ஆண்டுத் திறனுள்ள சுமார் 1000 விதைப் பக்குவ ஆலைகள் வேண்டியிருக்கும்" என்று அவர் மதிப்பிடுகிறார்.

அவ்வாலைகளைக் கட்டுவதற்கு சுமார் 20 கோடி டாலர் செலவாகும் என்று அவர் கூறுகிறார்; அவற்றின் ஆண்டு உற்பத்தி மதிப்புச் சுமார் 100 கோடி டாலராயிருக்கும்.

உடல் ஊனமுள்ள குழந்தைகள் விடுதிக்கு ரூ. 25,000

கோவை, நவ. 1—

அரசினர் நடத்தும் உடல் ஊனமுள்ள குழந்தைகள் நலப் பராமரிப்பு விடுதிக்கு உதவும் பொருட்டுத் திரைப்பட அதிபர் கோவை செழியன், ரூ. 25,000 நன்கொடை அளித்துள்ளார்.

தமது தயாரிப்பான ‘ஊட்டி வரை உறவு’ என்ற திரைப்படத்தை கோவை நகரில் வெளியிட்டதன் மூலம், இன்று ஒரு நாள் ஆன வசூல் தொகையை (ரூ. 25,000) அவர் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அளித்தார்.

பதுக்கல் வியாபாரிக்கு ரூ. 15,000 அபராதம்!

புதுடில்லி, அக். 31—

உணவுப் பொருள்களில் கலப்படம் செய்ததற்காகவும், பண்டத்தைப் பதுக்கிவைத்திருந்ததற்காகவும் காரிபோலியைச் சார்ந்த மொத்த வியாபாரி ஒருவருக்கு ரூ. 15,000 அபராதமும், நீதிமன்றம் கலையும் வரையில் காவல் தண்டனையும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதுவரை இவ்வளவு பெரிய தொகை இத்தகைய குற்றத்துக்கு அபராதம் விதிக்கப்பட்டதில்லையாம்!

அனைத்து நாட்டுப் பொருட்காட்சி!

தமிழக அரசு ஒத்துழைப்பு

சென்னை, அக். 31—

"அனைத்து நாட்டுத் தொழில்—வணிகப் பொருட்காட்சி வெற்றிகரமாக நடைபெறத் தமிழக அரசு இயன்ற அளவு எல்லா முயற்சியையும் செய்யும்"

என்று தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கூறினார்.

மார்க்கண்டேயனாகிறார் மாசே-துங்!

"என்றும் இளமை—எப்போதும் வலிமை" என்ற நிலையில், மக்கள்சீனத்தின் தலைவர் மாசே-துங் இருப்பதாக ‘மௌரீஷஸ்’ அதிபரான மொக்தார் அவததத்தா, பாரிஸ் நகரில், செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

பன்னிரண்டு நாட்கள் தூரக் கிழக்கு நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துள்ள அவர், சீன அதிபர் மாசே-துங் பற்றிக் கூறியிருப்பதாவது :—

"மாசே-துங், திடகாத்திரமான உடல்நிலை பெற்றிருப்பதாகவே எனக்குத் தோன்றியது.

"ஆப்பிரிக்க நாடுகள் பற்றி மட்டுமல்ல—உலகின் எந்த நாடுகள் பற்றியும், எல்லா நாடுகள் பற்றியும் அவர் பெற்றிருக்கும் அறிவு, என்னை வியப்பில் ஆழ்த்தியது!"

உள்ளாட்சிடாக்டர்கள் ஓய்வு பெறும் வயது!

சென்னை, அக். 31—

"உள்ளாட்சி மன்றங்களில் பணியாற்றும் மருத்துவ அதிகாரிகளின்ஓய்வு பெறும் வயதினை 55-லிருந்து 58-ஆக உயர்த்துவதுபற்றி மாநில அரசு ஆலோசித்து வருகிறது"

என்று, சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா கூறினார்.

உள்ளாட்சி மன்றங்களில் வேலை பார்க்கும் டாக்டர்கள், மற்ற டாக்டர்களைப்போல தங்களது ஓய்வு வயதையும் 58-ஆக உயர்த்திவிட வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள்; அது குறித்து முடிவு செய்யும் வரை தற்போதைக்கு ஓய்வு வயதை 56-ஆக அரசு உயர்த்தியிருக்கிறது" என்று அவர் கூறினார்.

காலத்தோடு முன்னேற!

சென்ற ஞாயிறன்று இரவு 2-மணியளவில், அமெரிக்காவும்—பிரிட்டனும், தங்கள் தேசிய நேரத்தை, ‘கிரீன் விச்’ கடிகாரத்துக்குத் தக்கவாறு மாற்றியமைத்துக் கொண்டிருக்கின்றன!

ஐரோப்பிய நேரத்துடன் ஒத்துப் போவதற்காகவும், கோடை காலப் பகல் நேரத்தை எப்போதும் பெறுவதற்காகவும், இங்கிலாந்து, தனது நேரத்தை ஒரு மணி பின்னால் தள்ளி வைத்துக்கொள்ளுகிறது!

அதேபோல், பகல் நேரத்தை அதிகமாக்கிக்கொள்ளும் நோக்கத்துடன், அமெரிக்கர்களும் தங்கள் கடிகாரங்களைத் திருத்தி வைத்துக் கொண்டிருக்கின்றனர்!

வீரவநல்லூரில் வடிகால் வெட்டினர்

கழகத் தோழர்களின் ஆக்கப் பணி

25—10—67 அன்று வீரவநல்லூர் 13-வது வார்டு கிளாக்குளம் தெருவில், மழையால் தண்ணீர் தேங்கி நின்றதால், பொதுமக்கள் நடந்துசெல்ல முடியாமல் இருந்ததுடன், வீடுகளுக்கும் சேதமேற்படும் நிலை இருந்தது. அதைக் கண்ட தி. மு. கழகத் தோழர்களும், எம். ஜி. ஆர். மன்ற உறுப்பினர்களும், வடிகால் வெட்டும் வேலையில் ஈடுபட்டு 2½ பர்லாங் வாய்க்காலை வெட்டினர்.

வீரவநல்லூர் தி. மு. கழக அவைத் தலைவர் கே. வி. தேவன் தலைமையில், வீரவநல்லூர் ஊராட்சிமன்றத் துணைத் தலைவர் சு. நாராயணன் வேலையைத் துவக்கிவைத்தார்.

பணிகள் நடைபெறுவதற்கு ஊராட்சி மன்றத்திலிருந்து தளவாடச் சாமான்கள் கொடுத்துதவினர்.

தொண்டர்களுக்கு செயலாளர் இலட்சுமணன் நன்றி கூறினர்.

மத்திய அரசின் வருமானம் கூடுகிறது !

புதுடில்லி, அக். 31— நடப்பு நிதியாண்டில் முதல் ஐந்து மாதங்களில் மத்திய அரசுக்கு ரெவினியூ இனத்தில், 769 கோடியே 25 இலட்சம் ரூபாய் வருமானம் கிடைத்திருக்கிறது.

சென்ற நிதி ஆண்டில் இதே ஐந்து மாதங்களில் 750 கோடியே 20 இலட்சம் ரூபாய்தான் வருமானம் கிடைத்தது.

இந்த ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் 158 கோடியே நான்கு இலட்சம் ரூபாய் வருமானம் இருந்தது; சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இது, 169 கோடியே 43 இலட்சம் ரூபாயாக இருந்தது.

சென்னை 96-வது வட்ட கலைஞர் பொதுப்பணி மன்றம்

சென்னை 96-வது வட்டம் அசோகாநகர்--புதூரில் 1-10-67ல் வட்ட தி. மு. க. துணைச் செயலாளர் நெடுமாறன் தலைமையில் துணை மன்ற நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது; கூட்டத்தில், 'கலைஞர் பொதுப்பணி மன்றம்' அமைக்க முடிவெடுக்கப்பட்டது. பின், எம். இலட்சுமய்யா (எஞ்சினீயர்) தலைவராகவும், வி. வீரப்பன் துணைத் தலைவராகவும், மு. முருகேசன் செயலாளராகவும், வி. பி. சிகாமணி துணைச்செயலாளராகவும், எம். இராமசாமி பொருளாளராகவும், 11-பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை 92வது வட்ட சின்னச்சாமி மன்றம்

சென்னை 92-வது வட்டம் சின்னசாமி நினைவு மன்றத்தின் நிர்வாகிகள் தேர்தல் 25—10—67 அன்று வட்டக் கிளைச் செயலாளர் செ. கண்ணப்பன் தலைமையிலும்—சா. கணேசன் எம்.சி. முன்னிலையிலும் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—அவைத் தலைவர் : கு. மணி ; செயலாளர் : கி. சண்முகம் ; துணைச் செயலாளர் : தா. இராசேந்திரன் ; பொருளாளர் : கி. கோபாலன் ; செயற்குழு உறுப்பினர்கள் : கோ. இறையரசு, தா. கோபால், கோ. கே. முருகேசன், முனுசாமி, அபுபேக்கர், பாபு.

இரங்கல்

எண்ணூர் தி. மு. செயலாளரும், செங்கற்பட்டு மாவட்டப் பிரதிநிதியும், எம்.ஜி.ஆர். மன்றத் தலைவருமான இ. வி. சேதுவின் தந்தையார் இயற்கையெய்தியது குறித்து பொன்னேரி வட்ட தி. மு. க. சார்பிலும், எண்ணூர் தி. மு. க. சார்பிலும் ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

சிவசேனை அட்டூழியம்

பம்பாய், அக். 31— மராத்தி மொழி பேசும் ஒரு கூட்டத்தினர், நேற்று மாதுங்காவில் உள்ள தென் இந்திய ஓட்டலின் மீது கற்களையும் புட்டிகளையும் வீசிச் சேதப்படுத்திமிருக்கின்றனர்.

ஓட்டல் ஊழியர் ஒருவர் இத் தாக்குதலினுல் காயமடைந்தார்.

இந்த ஓட்டலின் அருகிலுள்ள ஒரு கடையின் கண்ணுடிக் கதவும் மற்றும் அங்குள்ள சாமான்களும் சேதமடைந்திருக்கின்றன.

சொத்துக்களை நாசப்படுத்தியதாகவும், கலவரம் செய்ததாகவும் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இயந்திரத் திணிப்புக்கு எதிர்ப்பு

இரயில்வே ஊழியர்கட்கு அண்ணு உறுதிமொழி

சென்னை, அக். 31— சென்னையிலுள்ள தென்னக இரயில்வே அலுவலகத்தில் இயந்திரத் திணிப்பை எதிர்த்து நடைபெறும் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு அளிக்கவேண்டும் என்று கோரி தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்களிடம், இயந்திரத் திணிப்பு எதிர்ப்புக் குழுவினர் மனு ஒன்றைக் கொடுத்துள்ளனர்.

தமிழக அரசு இயந்திரத் திணிப்புக் கொள்கையை எதிர்த்து வருவதை அண்ணு அவர்கள் மீண்டும் வலியுறுத்தியதாகத் தெரிகிறது.

இது தொடர்பாகத் தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப ஒப்புக்கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

இராணியின் தரிசனம் !

ஜபல்பூரில் நடந்த காங்கிரசு மாநாட்டில், வயதான மூதாட்டியார் ஒருவர், இந்திராவை வாழ்த்தியதுடன் நில்லாது, வணங்கியுமிருக்கிருர் !

கிழிந்த உடையுடனும், நலிந்த உடலுடனும் தலைமையமைச்சரை 'தரிசிப்'பதற்காகவென்று பல நூறு மைல்கள் பயணம் செய்து—மாநாட்டுப் பந்தலில் உள்ள பெண்கள் பகுதியில் முண்டியடித்துக்கொண்டு முன்னேறிவந்த அந்த மூதாட்டியை, இந்திரா அருகில் அழைத்து, பாராட்டிப் பணமும் கொடுக்க சொல்லியிருக்கிருர் !

நமது 'இராணி'யை பார்க்க வேண்டும்—'தரிசிக்க' வேண்டும் என்று விருப்பம் தெரிவித்து வந்த அந்த மூதாட்டியார், தலைமையமைச்சரின் கால்களைத் தொட்டு வணங்கியதுடன் நில்லாது, அடுத்து இந்திராவை வாழ்த்தியிருக்கிருர் !

ரூ.140 கோடி செலவில் ஜெய்ம்பூர் நகர் வளர்ச்சி

ஜெய்ப்பூர் நகரை முப்பதாண்டுகளுக்குள் மேம்படுத்தும் பெருந்திட்டமொன்றை இராஜஸ்தான் அரசு ஆராய்ந்துவருகிறது.

புதிதாக 80 ஆயிரம் வீடுகளைக் கட்ட ரூ. 45 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது; குடிநீர் வழங்குதல்—சாக்கடை அமைத்தல்—மற்றும் பிற பொது வசதிகளுக்கு ரூ. 19½ கோடியும், புதிய பள்ளிகள்—மருத்துவமனைகள்—சுகாதார நிலையங்கள் ஆகியவற்றை அமைக்க ரூ. 7 கோடியே 20 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜெய்ப்பூர் நகரம், 1717-ம் ஆண்டு அமைக்கப்பட்டது; அதன் மக்கள் தொகை, 1901-ம் ஆண்டு 1,67,000-ஆக இருந்து இப்போது 5 இலட்சமாக ஆகியிருக்கிறது. இது, இந்நூற்ருண்டுக் கடைசிக்குள் 12 இலட்சத்தைத் தொட்டு விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



1½ டன் எடை சாமான் ஏற்றும் பார்கோ D-300

சிறிய வண்டிகளிலே பெரிது; பெரிய வண்டிகளின் உழைப்பு. சுருங்கச் சொன்னல் நடுத்தரமான நல்ல வண்டி பார்கோ D-300. அதிகச் சாமான்களை ஏற்றிச் செல்ல அடக்கமான வண்டி பார்கோ D-300. சாலைகளிலே சங்கடமில்லாமல் ஓட்டவும் போக்கு வரத்து நெரிசலைச் சுலபமாகச் சமாளிக்கவும் பொருத்தமான வண்டி பார்கோ D-300. பிக் அப்-வான், டெலிவரி வான், ஸ்டேஷன் வாகன், ஆம்புலன்ஸ் ஆகிய எந்த விதத்திலும் உபயோகிக்கலாம். நகரத்திலும் அதன் சுற்றுப்புரங்களிலும் ஆட்களையும் சாமான்களையும் குறைந்த செலவில் ஏற்றிச் செல்ல, இணையற்ற வண்டி பார்கோ D-300

சக்தி மிக்க 28.35 H.P. பெட்ரோல் என்ஜின் ● 3,112 மீ.மீ. (123'') WB அல்லது 3,336 மிமி (133'') WB ஆகிய இரண்டில் விருப்பமானதைத் தேர்ந்தெடுக்கலாம் ● சுலபமாகவும் விரைவிலும் ரிப்பேர் செய்ய பானெட் திறப்பு வசதி.

● (பிரிமியர் ஆட்டோமோபைல்ஸ் தயாரிப்பு)

தவணை ஏற்பாடு

சுந்தரம் பைஞன்ஸ் லிமிடெட் மூலம் சுலபமான மாதத் தவணைகளில் வாங்கலாம்.





TVS

முழு விவரங்களுக்கு அன்பு கூர்ந்து அணுகுக:

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட் மதுரை • திருச்சி • திருநெல்வேலி • புதுக்கோட்டை • சேலம் • கோயமுத்தூர் • திருவனந்தபுரம். சப் டீலர்கள்: P. N. கிருஷ்ண அய்யர் & ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சூர் • C. C. ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட், கள்ளிக்கோட்டை • திருவிலோன் ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட், கொல்லம் • மனோரஞ்சன் காங்கூலி & ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், புதுச்சேரி.

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் மதராஸ் • பங்களூர் • செகந்திராபாத் (A.P.) சப்டீலர்கள்; காரபதி காராஜ் 1959, விஜயவாடா • ஸ்ரீ பட்டாபிராம் கமர்ஷியல் சிண்டிகேட், காக்கிநாடா, விசாகப்பட்டிணம் • D. S. ஆட்டோமோபைல்ஸ், நெல்லூர் • தி மோட்டார் சேல்ஸ் கம்பெனி, அனந்தப்பூர் கர்நூல் • T. N. ரகுநாத ரெட்டி, கடப்பை • ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோமோபைல்ஸ், ஹோஸ்பேட் • P. V. பய் & கம்பெனி மங்களூர், மெர்க்காரா

தி-4272

அரிசி--நெல் கையிருப்பை அரசுக்கு அறிவிக்க வேண்டும்

தேவைக்கும் அதிகமாக வைத்திருந்தால் கைப்பற்ற அதிகாரம்

தமிழக அரசின் புதிய கொள்முதல் உத்தரவு

சென்னை, நவ. 2—

தமிழக அரசு, தனது புதிய கொள்முதல் கொள்கையினை, அக். 31-ம் நாள் அறிவித்தது.

1968 சூன் 28-ம் நாள் பிறப்பித்த நெல்—அரிசி கையிருப்பை அறிவித்தல், கொள்முதல் ஆணைக்குப் பதிலாக இந்தப் புதிய கொள் முதல் கொள்கை, மத்திய அரசின் அனுமதியுடன் அறிவிக்கப்பட்டுள்ளது.

பழைய ஆணை—சில குறைபாடுகளால், 'செல்லத் தக்கதல்ல' என்று உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது நினைவிருக்கலாம்; அந்தக் குறைகளை நிறைவு செய்து இந்தப் புதிய ஆணையைத் தமிழக அரசு பிறப்பித்துள்ளது; இது உடனடியாக நடைமுறைக்கு வருகிறது.

தமிழகம் முழுமைக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ள இப்புதிய ஆணைப்படி, 40 குவிண்டால் அல்லது அதற்கு மேல் நெல்லோ, 20 குவிண்டால் அல்லது அதற்குமேல் அரிசியோ வைத்திருக்கும் ஒவ்வொருவரும், நவ. 7-ம் நாளுக்குள் அரசுக்கு அறிவிக்க வேண்டும்.

சென்னையில் ரேஷன் அதிகாரியிடமும் பேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் கோவை ஆர்.டி.ஓ.விடமும், பிற இடங்களில் தாலுகா வழங்குதுறை அதிகாரி அல்லது தாசில்தார் அல்லது துணைத் தாசில்தாரிடமோ, அரிசி — நெல் கையிருப்பு அளவை அறிவிக்க வேண்டும்.

நவ. 7-க்குப் பிறகு 40 குவிண்டால் நெல் அல்லது 20 குவிண்டால் அரிசி கையிருப்பு—இருந்தால் அதை மேற்கண்ட அதிகாரிகளிடம் தெரிவித்துவிட வேண்டும்.

உணவுத் தானிய உற்பத்தியாளர்கள் தங்கள் சொந்தப் பயன்பாட்டுக்கும். அடுத்த அறுவடை வரை சாகுபடிச் செலவுகட்கும் தேவைப்படும் நெல்—அரிசி அளவு நிர்ணயிக்கப்பட்டபோது, எஞ்சியுள்ள கையிருப்பே கொள்முதல் செய்யப்படும். உற்பத்தியாளரல்லாதவர்களுக்குச் சொந்தத் தேவை போக எஞ்சிய கையிருப்புக் கொள்முதல் செய்யப்படும்.

இந்த ஆணையை மீறுவோரிடம் இருக்கும் கையிருப்பைக் கைப்பற்ற அரசு அதிகாரிகளுக்கு அதிகாரமுண்டு. கைப்பற்றப்படும் கையிருப்புப் பற்றிய இரசீது, சோதனை அதிகாரிகள் சம்பந்தப்பட்டவருக்கு வழங்கப்படும்.

கைப்பற்றப்படும் நெல்—அரிசிக்கான விலைகள், சம்பந்தப்பட்டவருக்குக் கொடுக்கப்படும்.

இந்த ஆணையை மீறுவோர்மீது தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் அனுமதியின்றி வழக்குத் தொடரப்பட மாட்டாது.

மாநில அரசு அல்லது மத்திய அரசு மருத்துமனைகள், கல்வி நிலையங்கள், அனுதை விடுதிகள் வசமுள்ள நெல், அரிசி கையிருப்புகளுக்கு இந்த ஆணை பொருந்தாது.

40 குவிண்டால் அல்லது அதற்கு மேல் நெல் அல்லது 20 குவிண்டால் அல்லது அதற்கு மேல் அரிசி வைத்திருப்போர் தங்களிடமிருக்கும் இருப்பை அறிவிப்பதற்கான நமூனு அக். 31-ம் நாள் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

சைக்கிள் ஊர்வலம்

சென்னை 7-வது வட்ட தி. மு. க. ஆதரவாளர்கள் சார்பில் 5-11-67 காலை 9-மணிக்கு வண்ணை தண்ணீர் தொட்டி முனையிலிருந்து என். குமந்தைவேலு தலைமையில்—மு. பாண்டியன் முன்னிலையில்—டி. கே. இராசு, முரசொலி மாறனை ஆதரித்துப் பிரச்சாரம் செய்யும் சைக்கிள் ஊர்வலத்தைத் துவக்கி வைப்பார்; ஊர்வலம், ஜி. ஏ. ரோடு, பிராட்வே, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, ஆயிரம்விளக்கு வழியாகச் செல்லும்.

வழக்கறிஞர்கள் எதிர்ப்பு!

புதுடில்லி, அக். 31—

உயர் நீதிமன்றங்களிலும், பல்கலைக்கழகங்களிலும் கட்டாயமாக வட்டார மொழிகளை மத்திய அரசாங்கம் பயன்படுத்த உத்தேசித்திருப்பதை இந்திய வழக்கறிஞர்கள் சங்கம் கண்டித்திருக்கிறது.

'முன்னாள் சென்னை மந்திரிகள்'

கிருபானந்தவாரியார் படப்பிடிப்பு

கடந்த 30—10—67 அன்று மும்பாய்-தாராவி பு. இ. சால் திடலில் நடந்த முத்துராமலிங்கத் தேவர் பிறந்த தின விழாப் பொதுக்கூட்டத்தில் கிருபானந்தவாரியார் பேசுகையில், முன்னாள் தமிழக மந்திரிகளைப் பற்றிக் கூறிய தாவது :—

"தானும் வாழ்ந்து பிறரும் வாழவேண்டும் என்று நினைப்பவன் மனிதன்! 'தான் மட்டும் வாழவேண்டும்—மற்றவர் கெட வேண்டும்' என்று நினைப்பவன் அரக்கன்! இரண்டாவது ரகம்தான் முன்னாள் 'சென்னை மந்திரிகள்'! 'இவர் தோற்க வேண்டும்' என்று அவரும், 'அவர் தோற்க வேண்டும்' என்று இவரும் வேலை செய்தனர்—கடந்த தேர்தலில்! மொத்தத்தில் எல்லா 'மந்திரி' களும் தோற்றனர்! 'யார்? யார்' என்பதைத் தனியாக வாருங்கள்—சொல்கிறேன்!"

—தகவல்: நெல்லை சு. தங்கையா

பருப்பு வகைகள்

பற்றுக்குறையையும் சமாளிப்போம்!

சென்னை, நவ. 2—

"அதிகார வரம்புக்குள் இருக்கும் பொருள்களைத்தான் நான் கட்டுப்படுத்த முடியும்; அரிசிப் பிரச்சினை இந்த மாநிலத்தின் அதிகாரவரம்புக்கு உட்பட்டது; ஆகையால் படி அரிசி ஒரு ரூபாய் என்று விலையைக் குறைத்தேன்!

"பருப்பு வகைகள் பஞ்சாப், அரியான மாநிலங்களிலிருந்து வரவேண்டும்; அவற்றிற்கு அங்கே தடை போட்டிருப்பதால், பற்றுக்குறை ஏற்பட்டு அதன் விலைகள் ஏறியிருக்கின்றன! அதையும்கூடச் சமாளிக்க, நம் நாட்டு விவசாயிகள் முன்பு செய்து வந்ததுபோல்—இரண்டு சாகுபடிக்கு இடைப்பட்ட காலத்தில் நன்செய் நிலங்களின் வரப்பு ஓரங்களிலும் துவரை, உளுந்து போன்றவைகளைப் பயிரிடச் செய்து, நமது மாநிலத்தின் நமது தேவைக்கு நாமே உற்பத்தி செய்துகொள்ளத்தக்க வகையில் சாகுபடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது பற்றி அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து வருகிறேன்."

--அறிஞர் அண்ணு

(புதுப்பேட்டைக் கூட்டத்தில்)

ஓட்டுப் பதிவு நேரம்

சென்னை, நவ. 3—

நவம்பர் 7-ம்நாள் தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்காக நடைபெறும் தேர்தலில், அன்று காலை 8 மணிமுதல் மாலை 5 மணி வரை ஓட்டுப் பதிவு செய்யலாம்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

4--11--67

வள்ளியூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு திருவள்ளுவர் கலையரங்கில்; தலைவர்: பு. சுப்பையா; பேசுவோர்: நடிகர்கள் கே. கண்ணன், தேங்காய் சீனிவாசன், மற்றும் கிளமெண்ட் பி.ஏ., பி.எல்., ஆ. பூ. இளங்கோவன், களந்தை ஜின்னு, இராதாசங்கர், ஆ. மகாராசன், ம. செங்குட்டுவன்.

5--11--67

நெய்வேலி

தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் சார்பில் மாலை 6-மணிக்கு திரு. வி. க. திடலில்; தலைவர்: வெ. இராமநாதன் பி.ஏ.பி.எல்; பேசுவோர்: காட்டூர் கோபால், வெ. கிருட்டினமூர்த்தி எம்.ஏ., பி.எல்., எம்.பி., எம். செல்வராசு, எஸ். இராமச்சந்திரன் பி. ஈ. (ஆனர்ஸ்), எம்.எல்.ஏ., டி. அமாவாசை, ஆர். அண்ணுவி, பி. இராமசாமி, ஏ. ஜி. கிருபாநிதி, கே. எஸ். இராசகோபால், சபாபதி, ரெங்கன்.

கரூர் 9-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு கிருத்துவர் தெருவில்: தலைவர்: கே. இராசரத்தினம்; பேசுவோர்: குன்னத்தூர் க. அன்பரசு, என்.ஆர். இராமசாமி, பரமத்தி சண்முகம், எஸ். சண்முகம், டி. பி. மூர்த்தி.

நெய்வேலித் தொழிலாளர் தோழர்களுக்கு:

"நமது சங்கத்தின் சிறப்புச் செயலாளர் காட்டூர் கோபால், நெய்வேலி சர்க்யூட் ஹவுசில் நவம்பர் 4, 5 ஆகிய இரண்டு நாட்களும் தங்கி சங்க அலுவல்களைக் கவனிக்க இருக்கின்ருர்; பிரச்சினைகள் உள்ள தோழர்கள், உடனடியாகச் செயலாளர் ஆண்டகுரோதன் அவர்களை அணுகவும், 5—11—67 காலை 10-மணிக்கு செயற்குழு உறுப்பினர்கள் தவருமல் செயற்குழுக் கூட்டத்திற்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என, நெய்வேலி தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் துணைத் தலைவர் டி. இராமசாமி அறிவிக்கிருர்.

"இருபது ஆண்டுக் காங்கிரசு ஆட்சியில் காணுத புதுமைகளை --- அனுபவிக்காத நன்மைகளை ---

எட்டே திங்கள் கழக ஆட்சியில்

கண்டு வியக்கிறோம்--அனுபவித்து மகிழ்கிறோம்"

என்று ஏழையர் இல்லமெல்லாம்---

உள்ளமெல்லாம் சொல்லி மகிழ்கின்றன!

★

'இந்த ஆட்சியே மக்கள் ஆட்சி'

என்று உறுதிப்படுத்திட---

'இந்த ஆட்சியின் சேவையே நாட்டுக்குத் தேவை'

என்பதை உலகிற்கு அறிவித்திட

வந்திருக்கிறது ஒரு வாய்ப்பு!

அதுதான்

தென் சென்னை நாடாளுமன்ற

இடைத் தேர்தல்: 7---11---67

★

தி. மு. கழக வேட்பாளர்

முரசொலி மாறன்

வாகை சூட



உதயசூரியன் சின்னத்தில்

முத்திரையிட்டு

உங்கள் உயிரினும் மேலான வாக்கினை

வழங்குவீர்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செங்குந்தர் தெரு, சென்னை-[illegible]) [illegible]